بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/08/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# 2024 ஆம் ஆண்டின் பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் இறங்கிய இறை அருள்கள் மற்றும் ஜமாஅத் அல்லாத விருந்தினர்களின் தாக்கங்கள் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்ஹம்துலில்லாஹ்! கடந்த வாரம் யூ.கே ஆண்டு மாநாடு அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளைக் காட்டியவாறு நிறைவை எட்டியது. இந்த மூன்று நாட்கள் பெரும் அருள்களின் நாட்களாக இருந்தன. அவை நம்மவர்கள் மீதும் அந்நியர்கள் மீதும் ஒரு நேர்மறையான தாக்கத்தை விட்டுச் சென்றன. அந்நியர்கள் சிலருடைய தாக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். ஆனால் அதற்கு முன்பு நான் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்கள் மாநாட்டிற்கு முன்பும், மாநாட்டின் போதும், மாநாட்டிற்குப் பிறகும் இந்த ஏற்பாடுகளை செய்வதிலும் அதன் இறுதிகட்ட பணிகளை மேற்கொள்வதிலும் தம் பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்; இப்பொழுதும் பணியாற்றி வருகிறார்கள்.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் பெண்களிடத்திலும் ஆண்களிடத்திலும் குழந்தைகளிடத்திலும் - இவர்கள் அனைவரிடத்திலும் எப்படிப்பட்ட தனிச்சிறப்பாக இது உள்ளது என்றால், அதை அன்னியர்களும் புகழ்கிறார்கள். மேலும், இந்தப் பணியாளர்கள் தம்முடைய கடமைகளை நிறைவேற்றியவாறு தம் பணிகளைச் செய்து கொண்டிருப்பது மௌனமான தப்லீக்காக இருக்கின்றது. மாநாட்டின் அனைத்துத் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கும் இதில் முக்கிய பங்களிப்பு உள்ளது. அவர்கள் நுழைவு வாசலில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் சரி! **Gate** -ல், **checking** -ல், **Parking** -ல், உணவு விநியோகம் செய்யுமிடத்தில், உணவு சமைக்குமிடத்தில், தூய்மைப் பணியில் இருந்தாலும் சரி! சிறு பிள்ளைகளுக்கு தண்ணீர் வழங்கக்கூடிய டியூட்டி உள்ளது. அல்லது பல்வேறு இடங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டு மாநாட்டிற்காக வேலை செய்யக்கூடிய எல்லாத் துறையும் எல்லா வகையிலும் மிகவும் நன்கு பணியாற்றுவதை காண முடிகிறது. அவர்கள் நன்றிக்கு உரியவர்களாக இருக்கிறார்கள்.

பல மக்கள் பணியாளர்களைக் குறித்து கூறும்போது புகழ்ந்து கூறுகிறார்கள்; எழுதி அனுப்புகிறார்கள். தம்முடைய தாக்கங்களை விட்டுச் செல்கிறார்கள். அதே போன்று, **MTA** மூலமாக மாநாட்டின் நிகழ்ச்சிகளை அழகிய முறையில் தங்களிடம் கொண்டு சேர்த்ததற்காக உலகில் பல்வேறு நாடுகளில் உள்ள மக்களும் நன்றியைத் தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே, இந்த அனைத்துப் பணியாளர்களுக்கு நானும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வருடம் பிரிட்டன் பணியாளர்களுடன் (சேர்ந்து பணியாற்றுவதற்காக) மொரீஷியசிலிருந்தும் முதல் முறையாக பெரும் எண்ணிக்கையில் குத்தாம் மற்றும் பணியாளர்கள் வந்திருந்தார்கள். மிகவும் நன்கு பணியாற்றினார்கள். அதேபோன்று

கனடாவில் இருந்தும் குத்தாம் வந்திருந்தனர். அவர்கள் இறுதிக்கட்ட பணிகளில் உதவி செய்து கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் கூலியை வழங்குவானாக! பிரஸ் & மீடியாவுடைய கவரேஜும் இவ்வருடம் மிகவும் நன்றாக இருந்தது. அதேபோன்று டிராஃபிக் உடைய ஏற்பாடும் மிகவும் நன்றாக இருந்தது. அக்கம் பக்கத்தார்களும் மகிழ்ச்சி அடைந்தனர். கடந்த வருடத்தை விட இவ்வருடம் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை குறைவாக இருந்திருக்கலாம்; ஆகவே இவ்வளவு எளிதாக டிராஃபிக் பணிகள் நடந்துள்ளன என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் கடந்த வருட எண்ணிக்கையை விட இவ்வருடம் 2000 அதிகமாகும் என்று அவர்களுக்கு இது பற்றி கூறப்பட்ட போது மிகவும் வியப்படைந்து விட்டனர். மாஷா அல்லாஹ், மிகவும் நல்ல ஏற்பாடாக இருந்தது. இப்பகுதியின் கவுன்சிலர் அஹ்மதியாவார்; முரப்பியும் ஆவார். அவர் அக்கம்பக்கத்தார் அனைவருடனான தொடர்புகளிலும், டிராஃபிக் திட்டங்களிலும் மிகவும் நல்ல பங்களிப்பை வழங்கியுள்ளார். அல்லாஹ் அவருக்கும் நற்கூலியை வழங்குவானாக!

எவ்வாறிருப்பினும் இப்போது நான் தாக்கங்களை எடுத்துக் கூறுவேன். இந்தத் தாக்கங்களைக் கூறக்கூடியவர்களின் உள்ளங்களையும் அல்லாஹ் திறப்பானாக. மேலும் அவர்கள் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியுடைய உண்மையான பொருளை புரியக்கூடியவர்களாக ஆவார்களாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தைப் பெறக் கூடியவர்களாக நாம் ஆவோமாக! மேலும் அவ்விஷயங்களை (இம்)மூன்று நாட்களுக்காக மட்டுமின்றி நாம் அவற்றை நம் வாழ்வின் அங்கமாகவும் ஆக்குவோமாக!

**பிரெஞ் கியானா** (French Guiana) -ல் இருந்து இஸ்மாயீல் சாஹிப் மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டின் போது பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. அவர் கூறுகிறார்: ''உலகின் அனைத்து முக்கிய மொழிகளைப் பேசக் கூடியவர்களும், பெரும் இனத்தைச் சார்ந்த மக்களும் ஒன்று கூடிய நிகழ்ச்சியை நான் என் வாழ்வில் ஒருபோதும் கண்டதில்லை. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு, இது உண்மையான ஜமாஅத் ஆகும்; இது முஹம்மது (ஸல்) அவர்களின் ஜமாஅத் ஆகும். நாம் நமது நபி (ஸல்) அவர்களின் குரலுக்கு ஆஜராகியவாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை காலத்தின் இமாமாக ஒப்புக்கொள்ளவில்லை என்றால் நாம் வழிகேட்டில் சென்று விடுவோம் என்ற எனது நம்பிக்கை திட நம்பிக்கையாக மாறியது.''

**ஜப்பானிலிருந்து** வந்திருந்த புத்த மதத்தினுடைய தலைமை போதகர் கூறுகிறார்: ''தொண்டு செய்யக்கூடிய தன்னார்வலர்கள் விழிப்புடனும், சுதாரிப்புடனும் தென்பட்டனர். முதல் நாளிலிருந்து இறுதி நாளின் இறுதி நொடி வரை பணியாளர்களின் உத்வேகமும் ஆர்வமும் அவ்வாறே நிலை பெற்றிருந்தது.''

அவர்கள் என்னையும் சந்தித்தார்கள். நான் அவர்களிடம், ஓர் இறைவன் மீது நம்பிக்கை கொள்வது அவசியமாகும். இதைப்பற்றி யோசியுங்கள்; சிந்தித்துப் பாருங்கள் என்று கூறியிருந்தேன்.

அவர் கூறுகிறார்: ''நான் புத்த மதத்தைப் பின்பற்றக் கூடியவனாக இருக்கின்ற காரணத்தினால் பாரம்பரிய வழக்கப்படி ஓர் இறைவனை ஏற்றுக் கொள்வதில்லைதான்! ஆனால் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த எஜமானன் ஒருவன் இருக்கிறான். நாம் அனைவரும் அவனுடைய படைப்புகள் ஆவோம். படைப்பாளனும் எஜமானனுமாகிய இறைவனின் நெருக்கத்தை நாம் பெற இயலும் என்று எனது உள்ளம் கூறுகின்றது.'' எவ்வாறிருப்பினும், அல்லாஹ்வின் பக்கம் அடியெடுத்து வைப்பதற்கான சிந்தனை கொஞ்சமாவது அவர்களிடத்தில் உருவாகியுள்ளது.

**கொஸோவோ** (Kosovo) -விலிருந்து ஒரு விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: ''கலீஃபா அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு எனக்குள் ஓர் ஆன்மிக மாற்றம்

உருவாவதை நான் காண்கிறேன். இந்தச் சூழல் எனக்குள் இஸ்லாம் அஹ்மதிய்யத்துடைய ஒரு நேசத்தை நிரப்பி விட்டது. நான் செல்லும் இடத்தில் அஹ்மதிய்யத்தின் உண்மையான போதனையைப் படியுங்கள் என்று மக்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டுவேன்.''

**சிலீ** (Chile) உடைய மத்திய அரசாங்கத்தின் டைரக்டர் ஆஃப் ஒர்ஷிப் ஆக பணியாற்றிக் கொண்டிருக்கும் விருந்தினர் ஒருவர் கூறுகிறார்: ''அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து நாட்டில் உள்ள இதர முஸ்லிம் அமைப்புகளிடம் கருத்து கேட்டபோது அனைவரும் எதிர்மறையான விஷயங்களைக் கூறினார்கள். (அஹ்மதிகளாகிய) இவர்கள் முஸ்லிம்கள் கிடையாது என்பதே அதனுடைய சுருக்கம் ஆகும். மாநாட்டில் உங்களுடைய கலீஃபாவை சந்தித்தேன். இதற்குப் பிறகு நான் வாக்குறுதி அளிப்பது என்னவென்றால், நான் எனது பங்களிப்பை முழுமையாக வழங்குவேன். என் செல்வாக்கின் கீழ் உள்ள மக்களுக்கு முன்னால் எனது அனுபவத்தை வெளிப்படுத்தியவாறு, அஹ்மதிகள் முஸ்லிம் மட்டுமின்றி மிகச் சிறந்த முன்னுதாரண முஸ்லிம்கள் ஆவார்கள் என்று கூறுவேன்.''

**ஹாலந்தைச்** சார்ந்த பெண்மணி ஒருவர் கூறுகிறார்: இந்த மாநாட்டிற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல மக்கள் வந்திருந்தார்கள். வினோதமான சகோதரத்துவத்தின் ஒரு வெளிப்பாடு இருந்தது. உலகளாவிய பைஅத் அமர்வை வாழ்க்கை முழுவதும் நினைவில் வைத்திருப்பேன். அஹ்மதிய்யா ஜமாஅத் செய்வதைப் போன்று உலகில் ஒவ்வொரு நபரும் மனிதத்துக்காக அதிக புரிதலையும், விழிப்புணர்வையும், அனுதாபத்தையும் உருவாக்கி விட்டால் உலக விவகாரங்களுக்கு நிச்சயமாக தீர்வு காண முடியும்!''

**அர்ஜென்டைனுடைய** நேஷனல் செக்ரெட்டரி ஆப் ஒர்ஷிப் -க்கு பிரதிநிதித்துவம் வகித்திருந்த விருந்தினர் ஒருவர் கூறுகிறார்: ''நான் உங்களுடைய ஜமாஅத்தின் மாநாட்டை ஏக்கத்துடன் கண்டேன். ஏனென்றால், எந்த அளவு சிறப்பாகவும் ஒழுங்கமைப்புடனும் நீங்கள் இந்த அளவு பெரிய கூட்டத்திற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளீர்கள்! இது எங்களது நாட்டில் சாத்தியமற்ற விஷயமாகும். கலீஃபா அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சமூக அழுத்தம் மற்றும் மேற்கத்திய உலகின் தாக்கம் இருந்த போதிலும் நீங்கள் உங்களது அடிப்படை (கொள்கை) இல் உறுதியுடன் நிலைபெற்று இருக்கிறீர்கள்.''

**தைவானில்** இருந்து வந்திருந்த விருந்தினரான பெண் மருத்துவர் கூறுகிறார்: ''தன்னார்வ தொண்டர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வளவு பெரிய மாநாட்டை நான் ஒருபோதும் கண்டதில்லை. பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவில் அஹ்மதி சிறுமிகளும், பருவ வயதை அடைந்த சந்ததிகளும் தம் கலீஃபாவை எந்த அளவு நேசிக்கிறார்கள் என்று அனுமானிக்க முடிந்தது.''

**கனடா**வைச் சார்ந்த யாசீன் அஹ்மதி சாஹிப் எனும் விருந்தினர் ஒருவர் கூறுகிறார்: ''அஹ்மதிய்யா ஆண்டு மாநாட்டை நான் மார்க்கத்தின் தோற்றத்தில் நுட்பம், அறிவு ஆகியவற்றின் மகத்தான காட்சியாகக் கண்டேன். அஹ்மதிகளின் மகத்துவம், கண்ணியம், பொறுமை, சகிப்புத்தன்மை, இஸ்லாமிய போதனைகளுக்கு நடுநிலையான விளக்கங்கள் அளித்தல் ஆகியவை மார்க்கத்தின் பெயரால் பல நூற்றாண்டுகளாக இருந்த இரத்தம் சிந்துதல், தீவிரவாதம் ஆகியவற்றிற்குப் பிறகு இறைவனுடைய நேர்வழியின் நிழலில் ஒரு நிம்மதி நிறைந்த அமைதி நிறைந்த வாழ்வின் நற்செய்தியாக இருந்தது.''

**உருகுவே** (Uruguay) விலிருந்து வந்திருந்த ஜமாஅத் அல்லாத பெண் விருந்தினர் கூறுகிறார்: ''மாநாட்டில் கலந்து கொண்டது எனது ஆன்மிக வாழ்வில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆண்கள் துஆ செய்யும்போது அழுத காட்சி மிகவும் நினைவு கூரத்தக்க தருணமாக எனக்கு இருந்தது.''

**கோஸ்டாரிகா (Costa Rica)** விலிருந்து வந்திருந்த பெண் விருந்தினர் கூறுகிறார்: "ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டதில் எனக்கு வியப்பும் ஏற்பட்டது; மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஏனென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஆண்களுக்கு இணையான அந்தஸ்து பெண்களுக்கு கொடுக்கப்படுகிறது."

**ஐஸ்லேண்டிலிருந்து** வருகை தந்திருந்த விருந்தினர் ஒருவர் கூறுகிறார்: "மாநாட்டில் இவ்வளவு பெரும் கூட்டம் இருந்த போதிலும் (ஆண்கள் பெண்களுக்கிடையில்) மறைப்பு கருத்தில் கொள்ளப்பட்டது. இது சாதாரண விஷயம் ஒன்றும் கிடையாது."

*ஹுஸூர் அவர்கள் தன்சானியா, சியரா லியோன், ஸ்பெயின், பிராஸீல், போலந்து மற்றும் இதர நாடுகளில் இருந்து வந்திருந்த விருந்தினர்களின் தாக்கங்களை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்:* சில தாக்கங்களைக் குறித்து நான் எடுத்துரைத்துள்ளேன். **ஆண்டு மாநாட்டின் விளைவால் நிகழ்ந்த பைஅத்துகளின் அறிக்கை இவ்வாறு உள்ளது;** கினி பிசாவு (Guinea-Bissau) -வைச் சார்ந்த ஒரு கிராமத்து தலைவர் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகு 85 நபர்களுடன் பைஅத் செய்தார். தன்சானியாவில் ஒரு கிராமத்தின் பள்ளிவாசலுடைய இமாம் பைஅத் செய்துள்ளார். நைஜரில் ஒரு மதரசாவின் முஅல்லிமா பைஅத் செய்துள்ளார். மாநாட்டின் போது காங்கோ பிராஸ்வீல் (Congo-Brazzaville) -ல் 12 நபர்கள் பைஅத் செய்துள்ளார்கள்.

**யூ.கே உடைய தப்லீக் துறையின் அறிக்கை** என்னவென்றால், மாநாட்டின் போது யூ.கே வைச் சார்ந்த 22 நபர்களுக்கு பைஅத் செய்யும் நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. அஹ்மதியல்லாத விருந்தினர்கள் ஓராயிரம் பேர் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

**ஆன்லைன் கவரேஜ் தொடர்பாக உள்ள அறிக்கை** என்னவென்றால், 49 வெப்சைட்களில் மாநாட்டின் செய்திகளைப் படித்தவர்களின் எண்ணிக்கை 15 மில்லியன் என்று கூறப்படுகின்றது. print coverage கட்டுரைகளின் எண்ணிக்கை 14 ஆகும். அந்த செய்தித்தாள் வாசகர்களின் எண்ணிக்கை 5 மில்லியன் என்று கூறப்படுகின்றது. TV மூலமாக பார்த்தவர்களின் எண்ணிக்கை 10 மில்லியன் என்று கூறப்படுகின்றது. பல்வேறு ரேடியோ ஸ்டேஷன்கள் மூலமாக கேட்டவர்களின் எண்ணிக்கையும் 10 மில்லியன் ஆகும்.

அதேபோன்று புகைப்படக் கண்காட்சி, வரலாறு மற்றும் இதர துறைகளின் கண்காட்சிகளைக் கண்டும் பல மக்கள் பெரும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளார்கள். இந்த அனைத்துக் கண்காட்சிகளும் தப்லீகிற்கான ஒரு வழிமுறையாக ஆகியுள்ளன. **அல்லாஹ்வின் அருளால் ஏறக்குறைய 46 மில்லியனை விடவும் அதிகமான மக்கள் ஆண்டு மாநாட்டின் செய்திகளைக் கண்டுள்ளார்கள்; கேட்டுள்ளார்கள்.** அடுத்து வரும் சில நாட்களில் மேற்கொண்டு கவரேஜ் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

அல்லாஹ்வின் அருளால் இந்த ஆண்டுமாநாடு நம்மவர்களுக்கு தர்பிய்யத், ஆன்மிகம் ஆகியவற்றில் முன்னேறுவதற்கு காரணியாக அமைந்த அதே நேரத்தில் மற்றவர்களுக்கும் இஸ்லாத்தின் போதனையைப் புரிவதற்கும், அவர்களை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதற்கும் வழிமுறையாக ஆகியுள்ளது. இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு முன் இன்னும் அதிகமாக குனிந்து அவனுக்கு நன்றி செலுத்துகின்ற அதேவேளையில் நாம் எப்போதும் அல்லாஹ்வின் தூதுச்செய்தியை, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் தூதுச்செய்தியை எட்ட வைப்பதற்கு முன்பை விடவும் அதிக முயற்சி செய்து வருவோம் என்ற உறுதிமொழியில் நிலை பெற்றிருக்க வேண்டும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)